
# பாப் பெருமானார்

## ஒரு புதிய யுகத்தின் முன்னோடி




பாப் பெருமான் 20 அக்டோபர் 1819 அன்று ஈரானின் தெற்குப் பகுதியில் உள்ள ஷிராஸ் என்னும் நகரத்தில் பிறந்தார். அவரது தந்தை இறந்தபோது அவர் இன்னும் குழந்தையாக இருந்தார். அவரது மாமாவால் வளர்க்கப்பட்டு, சிறுவயதிலேயே அவரை அவர் பள்ளியில் சேர்த்தார்.




பாப் பெருமானின் ஆசிரியர் அவரது பெரும் திறனை விரைவாக அடையாளம் கண்டுகொண்டு, அத்தகைய அசாதாரண குழந்தைக்குக் கற்பிக்க தம்மால் இயலாது என்பதை உணர்ந்தார். பாப் பெருமானார் கடவுளால் உள்ளார்ந்த அறிவு வழங்க பெற்றார்.



அந்த நேரத்தில் ஈரான் மக்கள் ஒரு புதிய இறைத்தூதரின் வருகைக்காக காத்திருந்தனர். அவர் விரைவில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும், பூமியில் சமாதானமும் நீதியும் நிறைந்த ஒரு காலகட்டத்தை அவரோடு கொண்டு வர வேண்டும் என்றும் அவர்கள் பிரார்த்தனை செய்தனர். வாக்குறுதியளிக்கப்பட்டவரைத் தேடி பலர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.




மே 23, 1844 அன்று, வாக்குறுதியளிக்கப்பட்டவரைத் தேடி ஓர் இளைஞன் ஷிராஸுக்கு வந்தான். பாப் பெருமானார் நகரத்தின் நுழைவாயிலுக்கு வெளியே அவரைச் சந்தித்து, அவரது நீண்ட பயணத்திற்குப் பிறகு சிரம பரிகாரம் செய்துகொள்ள தமது வீட்டிற்கு அழைத்தார். அங்கு பாப் பெருமானார் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வாக்களிக்கப்பட்டவர் தாமே என அறிவித்தார் .



"பாப்" என்ற சொல்லுக்கு "வாயில்" அல்லது "கதவு" என்று பொருள். விரைவில் உலகின் அனைத்து மக்களையும் ஒரே குடும்பத்தில் ஒன்றிணைக்கும் மற்றொரு இறைத்தூதர் தோன்றுவார் என பாப் பெருமானார்  அறிவித்தார். பாப் பெருமானார்  மனிதகுலத்தை ஒரு புதிய மற்றும் மகிமையான எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு கதவு போன்றவர்.



பாப் பெருமானாரைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்தது. ஈரான் முழுவதிலும், அவர் வெளிப்படுத்திய தெய்வீக போதனைகளை அவர்கள் பரப்பத் தொடங்கினர்.




விரைவிலேயே மக்கள் மீதான தங்கள் அதிகாரத்தை இழந்துவிடுவோம் என்று அஞ்சிய அரசாங்க அதிகாரிகளும் மதகுருமார்களும் புதிய இறைநம்பிக்கைக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். அவர்கள் அவரது நம்பிக்கையாளர்களிடமிருந்து வெகு தொலைவில், நாட்டின் தொலைதூரப் பகுதியில் ஒரு கோட்டையில் பாப் பெருமானாரைச் சிறையில் அடைத்தனர்.



பாப் பெருமானாரின் சீடர்கள் மிகக் கொடூரமான துன்புறுத்தலுக்கு ஆளானார்கள். அவர்கள் வதைக்கப்பட்டு, தாக்கப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்ட போதிலும், கடவுளின் சமயம் தொடர்ந்து பரவியது.



1850 ஆம் ஆண்டில் பாப் தியாகமரணம் அடைந்தார். அரசின் உத்தரவின் பேரில் ,அவரது சீடர்களில் ஒருவருடன் ஒரு முற்றத்தில் தொங்கவிடப்பட்டு, சிப்பாய்களின் படையணியால் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது பாப் பெருமானாருக்கு 31 வயதே ஆகியிருந்தது.



“கடவுளின் ஜோதி”, என்னும் பஹாவுல்லாவின் வருகைக்கு வழி வகுக்க பாப் பெருமானார் தமது உயிரைக் அர்ப்பணித்தார்." அவரது சமயத்தின் பதாகை பூமியின் ஒவ்வொரு மூலையிலும் உயர்த்தப்படும்

பதிப்புரிமை © 2013, 2023 - ரூஹி அறக்கட்டளை, கொலம்பியா
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பு 2.1.2.PE டிசம்பர் 2023, தமிழில் வெளியிடப்பட்டது

ரூஹி பயிற்சிக்கழகம்
மின்னஞ்சல்: instituto@ruhi.org
வலைத்தளம்: www.ruhi.org